**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – ஜனவரி 2018**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2018 ஜனவரி மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 2,095 | 19,942 |
| பக்கம் தவறியவை | 44 | 1010 |
| பக்கம் சிதைந்தவை | 08 | 176 |
| மொத்தம் | 2,147 | 21,128 |

## எண்ணிம நூலகம் (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 63 ஆவணங்கள் 4,418 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாண பொது நூலக பத்திரிகை ஆவணவாக்கலில் இம்மாதம் 322 ஆவணங்கள் 8,190 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் பல்கலைக்கழக ஆவணவாக்கலில் இம்மாதம் 1,763 ஆவணங்கள் 8,536 பக்கங்கள்ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- 2,619 ஆவணங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- 2,316 ஆவணங்களுக்கான கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கலின் முக்கியம் கருதி பக்கம் தவறியவை மற்றும் சிதைந்தவைகளும் தொடர்ந்தும் ஆவணமாக்கப்பட்டுகின்றது.
- இம் மாதம் 01 ஆவணங்கள் 16 பக்கங்கள் இரு முறை மின்வருடப்பட்டுள்ளது.

## சேகர அபிவிருத்தி (Collections Development)

ஆவணவாக்கலில் இம் மாதம் க.பரணீதரன், சம்மாந்துறை சாஹிர் ஆகியோரால் கொண்டுவரப்பட்ட ஆவணங்களும் தில்லைநாதனது ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளது. மேலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆவணங்களும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

### ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)

ஜனவரி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
    - Puthiya Thalam (Magazine)
    - J/ Manipay St. Annes R.C.T.M. School
    - J/ Uduvil Girls' College
    - J/ Avarangal Nadaraja Ramalinga Vidyalayam
    - J/ Attiaar Hindu College
    - J/ Kopay Maha Vidyalayam
- எழுத்தாளர்கள்
    - Sellathurai, Sutharsan
    - Queenjesely Kalamany

### காப்புப்படி (Backup)

50001-52000 வரையான ஆவணங்கள் அனைத்தும் வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

### Master-files and Applications Backup

இம்மாதம் எடுக்கப்படவில்லை

### ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் ஜனவரி மாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| நூற்பட்டியல் | 03 |
| ஒலிச்சேகரம் | 02 |
| படங்கள் | 445 |
| ஓவியங்கள் | 40 |
| நிகழ்ப்படம் (காணொளிகள்) | 01 |
| வாய்மொழி வரலாறுகள் | 02 |

### பயனர் சேவை (User Service)

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 22,190 பயனர்களால் 241,440 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 72.7% புது வாசகர்களும் 27.3% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 1,982 பயனர்களால் 16,400 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 83.6% புது பயனாளர்களும் 16.42% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

### எழுத்துணரியாக்கம் (OCR)

இம்மாதம் 1,360 மின்னூல்களுக்கு உரிய எழுத்துணரியாக்க (OCR) இணைப்புகளை எண்ணிம நூலக இணையப் பக்கத்தின், ஒவ்வொரு இணையநூல் பக்கத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன

### செயற்றிட்டங்கள் (Projects)

## 1. EAP

இம்மாதம் (தை மாதம்) EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக நூலக நிறுவனத்தின் பதின்னான்காவது அகவை தொடக்க விழாவில் ஆவணகம் வலைத்தளம் தொடர்பான அறிமுக விளக்கம் வழங்கப்பட்டது.

01/28/2018 அன்று "பழைய ஆவணங்களை பாதுகாத்தல் மற்றும் எண்ணிமப்படுத்தல்" தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்று ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

மாதம் ஒன்றிற்கு 1000 புகைப்பட ஆவணங்கள் 15-20 வாய்மொழி வரலாற்று ஆவணங்கள் சேகரிக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் இச் செயற்றிட்டம் நகர்கின்றது.

### 2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்

இம்மாதம் (தை மாதம்) EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக 300 புகைப்படங்கள் தரவேற்றம் செய்யப்பட்டன.

### 3. வாழ்க்கை வரலாற்று ஆவணப்படுத்தல்

இம்மாதம் EAP 1056 செயற்திட்டத்திற்கு அமைவாக தை மாத கள ஆய்வின்படி 06 வாய்மொழி வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டன. கிழக்கில் 01 வாய்மொழி வரலாறு பதிவுசெய்யப்பட்டது.

### வழிகாட்டுநர் சபை (Regulatory Board)

இம்மாதம் இடம்பெற்ற கூட்டத்திற்கான இணைப்பு.

- ஜனவரி 21, 2018

https://docs.google.com/document/d/1lh_Sb4P60mC7LlIqA0No9jhijm2nZ1hJzAcjgLAZFoE/edit

### வரவு செலவு அறிக்கை (Financial Statement)

- ஜனவரி மாதத் தேவைகளுக்காக ரூ. 842,812.69 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 140,875.00, தொடர்பாடல் ரூ. 11,701.99, மின்சாரம் ரூ. 2,600.70, வாடகை ரூ. 30,000.00, உபகரணச் செலவு (4 Harddisk) ரூ. 398,750.00, நிருவாகச் செலவு ரூ. 59,500.00, செயற்றிட்டச் செலவு (EAP) ரூ. 177,160.00 மற்றும் ஏனைய செலவுகள் ரூ. 22,225.00 ஆகியன உள்ளடங்குகின்றன.

- ஜனவரி மாதம் கனடா அன்பர்கள் ஊடாக ரூ. 84,183.80, மனிதநேயம் அறக்கட்டளை ஊடாக ரூ. 350,000.00 மற்றும் அவுஸ்ரேலியா அன்பர்கள் ஊடாக ரூ. 258,279.41 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.